**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி**

**முன்னிலை: திரு.எஸ்.வடிவேல், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவிநாசி**

**2024 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 18–ஆம், நாள் வியாழன்கிழமை**
**CNR No.TNTI12-000014-2011**
**இடைநிலை மனு எண்.03/2023**
**இன்**
**அசல் வழக்கு எண்.77/2011**

பேச்சியம்மாள்

...மனுதாரர்/வாதி

**.. எதிர் ..**

1.முத்துச்சாமி

2.கலாமணி

3.சதீஸ்குமார்

4.கருப்புச்சாமி

5.பிரசாந்த்

6.பூவாத்தாள்

7.சரசாத்தாள்

8.மயங்காத்தாள்

9.கோவிந்தசாமி

10.பழனிச்சாமி

11.பழனி

12.P.P.சாந்தி

...எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக 03.01.2024ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஏ.ஆறுமுகம் அவர்கள் ஆஜராகியும், 6 முதல் 9 மற்றும் 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.கார்த்திக் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஜி.ராஜசேகரன் அவர்கள் ஆஜராகியும் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாத் தரப்பினர்களாக உத்திரவிடப்பட்டும், 1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினராக உத்திரவிடப்பட்டுள்ளதால் இம்மனுவிற்கு அறிவிப்பு அனுப்பாமலும், (10, 11ம் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக அசல் வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டும்) இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## உத்தரவு

மனுவில் குறிப்பிட்டுள்ளப்படி தாவாவை திருத்தம் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6 விதி 17, 18-ன்படி, மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் பின்வருமாறு:-**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து

வருகிறதாகவும், வழக்கில் 11–ம் பிரதிவாதியான பழனி வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது காலமாகிவிட்டதாகவும், 11 வது பிரதிவாதியின் வாரிசுகளான ராமசாமி என்ற மகனும், அம்மிணி என்ற மகளும் இறந்துவிட்டதாகவும், மேற்படி தாவாவில் இத்துடன் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்டுள்ளவாறு திருத்தம் செய்யவேண்டியது அவசியமாக உள்ளதாகவும், மனு அனுமதிக்கவில்லை என்றால் மனுதாரருக்கு பெரும் இழப்பும், கஷ்டமும் ஏற்படும் என்றும், மனுவில் கண்டுள்ளவாறு திருத்தம் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:–</u>

மனுதாரர் மனுவில் கண்டுள்ள சங்கதிகள் பொய் என்றும், சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றும், இந்த எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூப்பிக்க வேண்டும் என்றும், மனு பிரமாண வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது பத்தியில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை மறுப்பதாகவும், மனு 3 வது பத்தியில் பழனி சொத்தை பற்றி எந்த ஏற்பாடும் செய்யாமல் அவரது மகன் ராமசாமி மற்றும் மகள் அம்மினி ஆகியோார் பழனி இறப்பதற்கு முன்பாகவே இறந்துவிட்டதாகவும், பழனி இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ்களை தாக்கல் செய்யவில்லை என்றும், பழனிக்கு முன்பாக இறந்து போனதாக சொல்லப்படும் ராமசாமி மற்றும் அம்மினி ஆகியோரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களை தாக்கல் செய்யவில்லை என்றும், காலம்

சென்ற பழனிக்கு 2ம் நிலை வாரிசுதாரர்கள் இருக்கலாம் என்றும், அவர்களை தரப்பினராக சேர்க்கப்பட வேண்டும் என்றும், பழனியின் சட்டப்படியான வாரிசுதாரர்களை தரப்பினராக சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இந்த மனு சரியானது அல்ல என்றும், முறையானது அல்ல என்றும், இந்த மனுவை அனுமதித்தால் தாவா சொத்துக்களை பொறுத்து எதிர்காலத்தில் பல்வேறு வழக்கு நடவடிக்கைகளை உருவாக்கும் என்றும், இந்த மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டப்பட்டுள்ளது.

4) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டுள்ளது. இரு தரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. வழக்கு கோப்புகளை கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**5) <u>இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா இல்லையா? என்பதே தீர்மணிக்கப்பட வேண்டிய விஷயமாகும்:–</u>**

5.1.) மனு தரப்பினர்களை அசல் வழக்கின் வரிசைக்கு இணங்க மனுதாரரை வாதி என்றும், எதிர்மனுதாரர்களை பிரதிவாதிகள் என்றும் குறித்து உரைக்கப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீன பரிகாரம் கோரி பிரதிவாதிகளுக்கு எதிராக தொடரப்பட்டுள்ளது.

5.2.) மனு மற்றும் எதிருரையை கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக்கொண்டுள்ள சூழ்நிலையில் கட்டளை 6 விதி 17 மற்றும் கட்டளை 22

விதி 4–ன் வகைமுறையை குறித்து உரைக்கபடவேண்டியது அவசியமாக உள்ளது.

Order 6 Rule 17 CPC
17. Amendment of pleadings.-

The Court may at any stage of the proceedings allow either party o alter or amend his pleadings in such manner and on such terms as may be just, and all such amendments shall be made as may be necessary for the purpose of determining the real question in controversy between the parties.

Provided that no application for amendment shall be allowed after the trial has commenced, unless the Court conies to the conclusion that in spite of due diligence, the party could not have raised the matter before the commencement of trial.

**ORDER 22 RULE 4 CPC**

4. Procedure in case of death of one of several defendants or of sole defendant.-

(1) Where one of the two or more defendants dies and the right to sue does not survive against the surviving defendant or defendants alone, or a sole defendant or sole surviving defendant dies and the right to sue survives, the court, on an application made in that behalf, shall cause the legal representative of the deceased defendant to be made a party and shall proceed with the suit.

(2) Any person so made a party may make any defence appropriate to his character as legal representative of the deceased defendant.

(3) Where within the time limited by law no application is made under sub-rule (1), the suit shall abate as against the deceased defendant.

(4)The court whenever it thinks fit, may exempt the plaintiff from the necessity of substituting the legal representatives of any such defendant who has failed to file a written statement or who, having filed it, has failed to appear and contest the suit at the hearing; and judgment may, in such case, be pronounced against the said defendant notwithstanding the death of such defendant and shall have the same force and effect as if it has been pronounced before death took place.

(5) Where,—

(a) the plaintiff was ignorant of the death of a defendant, and could not, for that reason, make an application for the substitution of the legal representative of the defendant under this rule within the period specified in the Limitation Act, 1963 (36 of 1963), and the suit has, in consequence, abated, and

(b) the plaintiff applies after the expiry of the period specified there for in the Limitation Act, 1963 (36 of 1963), for setting aside the abatement and also for the admission of that application under section 5 of that Act on the ground that he had, by reason of such ignorance, sufficient cause for not making the application within the period specified in the said Act,

the court shall, in considering the application under the said section 5, have due regard to the fact of such ignorance, if proved.

5.3.) மேற்கண்ட சட்டவகைமுறையை கவனமாக பரிசீலிக்கையில் தரப்பினர்களுக்கு இடையே உள்ள உண்மையான பிரச்சனைகளை முடிவு காண வேண்டி தரப்பினர்களின் வாதுரையை திருத்த அனுமதிக்கலாம் என்பதையும் போதிய கவனமுடன் இருந்தும் விடுபட்ட சங்கதிகளை சாட்சிய விசாரணைக்கு பிறகும் திருத்த அனுமதிக்கலாம் என்பதையும், இறந்து போன நபரின் சட்டப்படியான வாரிசுகளை சேர்த்து வழக்கினை தொடர்ந்து நடத்த அனுமதிக்கலாம் என்பதையும், இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொண்டுள்ளது.

5.4.) இந்த அசல் வழக்கு நிலுவையில் இருக்கும் போது 11ம் பிரதிவாதி பழனி என்பவர் இறந்துவிட்டதாக வாதி தரப்பில் கூறப்பட்டுள்ளது. 11ம் பிரதிவாதி இறந்து போனதாக வாதி தரப்பில் கூறுவதை பிரதிவாதிகள் தரப்பில் திட்டவட்டமாக

மறுக்கவில்லை. 11ம் பிரதிவாதிக்கு மகன் ராமசாமி என்பவரும், மகள் அம்மினி என்பவரும் வாரிசுகள் என்று வாதி தரப்பில் கூறியுள்ளதற்கு பிரதிவாதிகள் அதனை முழுமையாக மறுக்கவில்லை. 11ம் பிரதிவாதிக்கு முன்பாக அவரது வாரிசுதாரர்கள் இருவரும் இறந்துவிட்டதாக கூறப்பட்டுள்ளது. 11ம் பிரதிவாதியின் நிலை 2 வாரிசுதாரர்கள் இருக்கலாம் என்றும், அவர்களை இந்த அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவேண்டும் என்று எதிர்வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் 11ம் பிரதிவாதியின் நிலை 2 வாரிசுகள் யார் யார் என்பதை குறிப்பிட்டு பிரதிவாதிகள் தரப்பில் கூறப்படவில்லை. இந்த அசல் வழக்கானது கடந்த 28.02.2011–ல் கோப்புக்கு எடுக்கப்பட்டு கடந்த 13 வருடங்களாக நிலுவையில் இருந்து வருகிறது. கட்டளை 22 விதி 4–ன் வகைமுறைக்கு உட்பட்டு காலம் சென்ற 11ம் பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்க வேண்டியது அவசியம் என்ற போதிலும், 11ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள் ஏற்கனவே காலமாகிவிட்டதாலும், 11ம் பிரதிவாதியின் நிலை 2 வாரிசுகள் குறித்து தற்போது அறியமுடியவில்லை என்று வாதி தரப்பில் முன்வைத்துள்ள வாதத்தை கருத்தில் கொண்டும், இந்த அசல் வழக்கினை விரைவாக விசாரணை செய்ய வேண்டிய சூழ்நிலையிலும் வாதி தாக்கல் செய்துள்ள இந்த மனுவை நீதியின் நலன் கருதி அனுமதிக்க உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனு செலவு தொகையின்றி அனுமதித்து

உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 18.01.2024 அன்று அவையறிய பகரப்பட்டது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2024.01.18 13:44:20 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

**<u>பிற்சேர்க்கை:–</u>**
இல்லை

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2024.01.18 13:44:25 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

இ.நி.ம.எண்.3/2023
இன்
அ.வ.எண்.77/2011
சீரான/வரைவு உத்தரவு
நாள்.18.01.2024
மா.உ.நீ., அவிநாசி